**செ.வெ.எண்:23** **நாள்:15.03.2018**

## அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கத்தேர்தல் தொடர்பான கையேடு வெளியீடு.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், கூட்டுறவுத்துறையின் சார்பில் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் நிவர்காக குழு உறுப்பினர்களை தேர்தெடுப்பதற்கான கூட்டுறவு தேர்தலில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் **முனைவர்.மு.ராஜேந்திரன், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (15.03.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில்,** தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் **முனைவர்.மு.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள்** கூட்டுறவு சங்கத்தேர்தல் தொடர்பான தேர்தல் கையேட்டினை வெளியிட்டு **தெரிவித்தாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள 82 கூட்டுறவு நிறுவனங்கள் செயற்பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள 120 கூட்டுறவு நிறுவனங்கள் ஆகமொத்தம் 202 கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிர்வாக குழு உறுப்பினர்களுக்கான தேர்தல், நான்கு நிலைகளில் நடத்துவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, முறையே 02.04.2018, 07.04.2018, 16.04.2018 மற்றும் 23.04.2018 ஆகிய தேதிகளில் முதல் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது என தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் **முனைவர்.மு.ராஜேந்திரன்**, **இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தர்கள்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், கூடுதல் பதிவாளர் தேர்தல் அந்தோனிசாமி பீட்டர்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மண்டல இணைப்பதிவாளர் / கூட்டுறவு தேர்தல் பார்வையாளர் இரா.தயாளன், துணைப்பதிவாளர் / மாவட்ட கூட்டுறவு தேர்தல் அலுவலர் கே.கே.செல்வராஜ், பெரம்பலூர் மாவட்ட இணைப்பதிவாளர் வெ.பெரியசாமி, துணைப்பதிவாளர் த.பாண்டிதுரை, மாவட்ட கூட்டுறவு தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பட்டியல் அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**